| |
|---|
| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai |
| Date: 26.11.2025 |
| CC.No. 109/2023 |
| சாட்சி : PW1 |

| | |
|---|---|
| பெயர் : திரு. ராஜ்குமார் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. செல்வராஜ் | தொழில் : டெய்லர் |
| கிராமம் : | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 36/2025 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர் ) | |

-----------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது அக்கா. 1ம் எதிரி எனது அக்காவின் கணவர். 2ம் எதிரி தங்கரெத்தினம் எனது மூத்த அக்கா. 1ம் எதிரிக்கும், எனது அக்கா அ.சா.1 க்கும் திருமணாகி 13 வருடங்களாகிறது. திருமணத்திற்கு பின்பு வீரமலைப்பட்டியில் வசித்து வந்தார்கள். திருமணத்தின் பயனாக மூன்று குழந்தைகள் உள்ளது. மூன்றாவது மகனுக்கு புற்றுநோய் இருப்பதால் அதனால் வையம்பட்டியில் வீடு வாடகைக்கு எடுத்து மருத்துவம் பார்ப்பதற்காக குடியிருந்தார்கள். திருமணம் முடிந்து 6, 7 வருடங்கள் கழித்து 2ம் எதிரி அ.சா.1 னின் வீட்டிற்கு அடிக்கடி போக, வர இருந்தார். அதனால் 1ம் எதிரிக்கும், 2ம் எதிரிக்கும் தவறான உறவு ஏற்பட்டது. எனது அக்கா அ.சா.1 எனக்கு போன் செய்து இருவருக்குமான உறவை நான் நேரில் பார்த்தாகவும் அதனால் நான் மிகுந்த மனவேதனைக்கு உள்ளதானதாகவும் என்னிடம் சொன்னார். நான் வையம்பட்டிக்கு சென்று எதிரிகள் இருவரையும் ,அ.சா.1 யும் வைத்துக்கொண்டு என்னவென்று விசாரித்தபோது எதிரிகள் இருவரும் இவ்வாறான தவறுகள் செய்யமாட்டோம் என்று சொன்னார்கள். 2020 ம் ஆண்டு ஜீன் மாதம் வாரத்திற்கு இரண்டு நாட்கள் மட்டுமே அ.சா.1 வீட்டிற்கு வருவார். மற்ற நாட்களில் புகையிலைப்பட்டியில் உள்ள 2ம் எதிரி வீட்டிலியே இருப்பார். அது குறித்து

அ.சா.1 கேட்ட போது 1ம் எதிரி அவரை அடித்து போட்டுவிட்டு அவரது காதிலிருந்து மூக்கால் பவுன் தோடு, தாலி காசு, குண்டு மூக்கால் பவுன், பீரோவில் இருந்த நாங்கள் திருமணத்தின் போது ராணிக்கு கொடுத்த 3 பவுன் செயின், ராணி மில்லில் வேலைக்கு சென்று சேமித்து வைத்திருந்த 4 பவுன் செயின் ஆகியவற்றை எடுத்து சென்றுவிட்டார். அது குறித்து அ.சா.1, 1ம் எதிரியிடம் கேட்ட போது அப்படித்தாண்டா செல்வேன் புண்டா மகளே என்று கெட்ட வார்த்தையால் திட்டினார். சீமை எண்ணெய் ஊற்றி கொழுத்திவிடுவேன் என்று சொல்லி மிரட்டினார். அந்த தகவலை எனது அக்கா அ.சா.1 என்னிடம் சொல்லவும் நான் வையம்பட்டியில் உள்ள வீட்டிற்கு சென்று பார்த்த போது அ.சா.1 எனது அக்கா பலத்த காயத்துடன் கீழே கிடந்தார். அக்கம், பக்கம் விசாரித்த போது அவர்கள் அ.சா.1 னான எனது அக்காவை 1ம் எதிரி அடித்துபோட்டுவிட்டு புகையிலைப்பட்டிக்கு சென்றுவிட்டதாக சொன்னார்கள்.

2. 18.03.2021 அன்று நான், எனது அ.சா.1 ராணி, அப்பா, சாமிநாதன், செல்வராஜ் ஆகியோர்கள் புகையிலைப்பட்டியில் உள்ள 2ம் எதிரியின் வீட்டிற்கு சென்று பார்த்த போது எதிரிகள் இருவரும் வீட்டில் இருந்தார்கள். அ.சா.1 ராணி, 2ம் எதிரியிடம் ஏன்டி எனது நகைகளை நீ போட்டுள்ளாய் என்று கேட்டதற்கு எதிரிகள் இருவரும் அ.சா.1 ஐ அடித்தார்கள். அதனால் நாங்கள் எனது அக்காவை கூட்டிவந்துவிட்டோம். பின்பு மணப்பாறை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் 24.03.2021 அன்று புகார் கொடுத்தோம். அதன்பெயரில் 25.03.2021 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஒரு மாதம் கழித்து 24.04.2021 அன்று போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

3. நான் எனது சொந்த ஊர் என்னவென்றால் வெள்ளிவாடி. இந்த வழக்கில் புகார்தாரர் எனது அக்கா என்றால் ஆமாம். 1ம் எதிரி எனது மச்சான் என்றால் ஆமாம். 2ம் எதிரி எனது பெரியக்கா என்றால் ஆமாம். 1ம் எதிரி வீட்டிற்கும், எனது வீட்டிற்கும் எத்தனை கி.மீ தூரம் இருக்கும் என்றால் 20 கி.மீ தூரம் இருக்கும். எனது ஊருக்கும், மணப்பாறை அனைத்து மகளிர் காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 10 கி.மீ தூரம் இருக்கும். போனில் தகவல் சொன்னால் தான் எனது அக்கா வீட்டிற்கு சென்று பார்ப்பேன் என்றால் ஆமாம். எனது வீட்டிலிருந்து எனது அக்கா வீட்டிற்கு செல்லவேண்டும் என்றால் மூக்கால் மணிநேரமாகும் என்றால் ஆமாம். காவல்நிலையத்திற்கு வரவேண்டும் என்றால் 20 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் அரை மணிநேரத்தில் வந்துவிடலாம்.

4. 1ம் எதிரிக்கும், ராணிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு எவ்வளவு நாளாக இருக்கிறார்கள் என்றால் 6, 7 வருடமாக கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. கருத்து வேறுபாடு ஏற்பட்டு எத்தனை முறை பஞ்சாயத்து நடந்தது என்றால்

வீட்டில் 2 முறை பேசி பஞ்சாயத்து செய்தார்கள். கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருவரும் ஒருமித்த கருத்தோடுத்தான் அனுப்பிவைத்தார்கள் என்றால் சரிதான். என்னை புகார் சம்மந்தமாக எந்த தேதியில் , எத்தனை மணிக்கு எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் கரூரில் நான் வேலை பார்த்து கொண்டிருந்தேன். போலீசார் போன் மூலமாக ராணி அக்கா அதன் சம்மந்தமாக என்னிடம் விசாரித்தார்கள். என்ன பிரச்சனை என்று கேட்டார். அப்போது அன்றைய தினம் 24.04.2021 ம் தேதி விசாரித்தார்கள். என்னை போனில் விசாரித்தார்கள். அதன்பின்பு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். அதன்பின்பு நான் நேரடியாக நீதிமன்றம் வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம்.

5. நான் எனது அக்காவுடன் சென்று புகார் கொடுத்தேன் என்று சொல்லியிருந்தால் அது தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் மகளிர் காவல்நிலையத்திற்கு 24.03.2021 அன்று எனது அக்காவுடன் வந்து புகார் கொடுத்தேன். 25.03.2021 அன்று வழக்கு பதிவு செய்தார்கள். நான் சொல்வது போன்று எனது அக்காவுடன் சென்று நான் புகார் கொடுக்கவில்லை என்றும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதே போல் வழக்கிற்கு பாதகம் ஏற்பட்டுவிடும் என்பதால் அதனால் சாட்சியத்தை முன்குக்கு பின் முரணாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன விபரத்தைதான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம்.

6. சம்பவத்திற்கு பின்பு நான் எங்கு இருந்தேன் என்றால் கரூரில் இருந்தேன். கரூரில் இருக்கும்போது என்னை போலீசார் வழக்கு சம்மந்தமாக கேட்டார்கள், நேரடியாகவோ என்னை எதுவும் விசாரிக்கவில்லை. 1ம் எதிரி மீது நானும், எனது அ.சா.1 அக்காவும் எத்தனை முறை புகார் கொடுத்துள்ளோம் என்றால் வையம்பட்டி காவல்நிலையத்தில் இரண்டு முறை புகார் கொடுத்தோம். வையம்பட்டி காவல்நிலையத்தில் அழைத்து விசாரித்தார்கள். அதன்பின்பு எனது மச்சான் மீது வேறு மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் எனது அக்கா மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார், நான் உடன் இருந்தேன். அந்த சமயத்தில் 1ம் எதிரி அம்மாவும் உடன் வந்தார். நான் புகார் கொடுக்கும்போது மணி என்னவென்றால் 05.00, 05.30 மணியிருக்கும். அந்த புகார் எழுத்துமூலமான புகாரா அல்லது தட்டச்சு செய்யப்பட்ட புகாரா என்றால் எனது அக்கா கம்பியூட்டர் நிலையம் சென்று அவர் சொல்ல சொல்ல தட்டச்சு செய்யப்பட்டது, நான் அப்போது உடன் இருந்தேன். அந்த புகார் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் எனது அக்கா சொல்லி தயார் செய்யப்பட்டது. அந்த புகாரில் நான் சொல்லி ஏதும் தயார் செய்யப்படவில்லை. அவர் குடும்ப விபரத்தை அவர்தான் சொன்னார். அந்த புகாரில் எந்த தேதி என்று குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் குறிப்பிடப்பட்டிருந்தது.

7. அந்த குறிப்பிடப்பட்டுள்ள புகாரில் தேதி குறிப்பிடபடவில்லை என்று சொன்னால் அது எனது அக்கா கொடுத்த புகாரே இல்லை என்று சொன்னால் சரிதான். பின்னிட்டு சாட்சி பின்யோசனை செய்து 5 வருடம் ஆனதால் புகாரில் தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்ற விபரம் ஞாபகமில்லை, புகார் கொடுத்த தேதியும், விசாரித்த தேதியும் ஞாபகத்தில் உள்ளது. இந்த வழக்கிற்கு பாதகம் ஏற்பட்டுவிடும் என்பதால் தேதி ஞாபகமில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்ததா என்ற விபரம் குறித்தும் பின்யோசனை செய்து நீதிமன்றத்தை குழப்புவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோன்று 1ம் எதிரிக்கும், 2ம் எதிரிக்கும் எந்தவிதமான உறவுகளும் இல்லை என்றும் நாங்களாக பொய்யாக ஜோடிக்கப்பட்ட புகாருக்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல .நான் சொல்வதுபோன்று 1 ம் எதிரி, 2ம் எதிரி எனது அக்கா அ.சா.1 ஐ எந்தவிதமான கெட்டவார்த்தையால் திட்டவில்லை என்றும், எந்தவிதமான வரதட்சணை வன்கொடுமை செய்யவில்லை என்றும், கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லி நீதிமன்றத்தில் மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்தாக சொல்லப்படும் நகைகளை குறித்து அதற்குரிய ஆவணங்களான ரசீதை போலீசாரிடமோ, நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார்களா என்பது குறித்து தெரியுமா என்றால் இருபது வருடத்திற்கு முன்பு எனது அக்காவின் திருமணத்தின் போது போட்ட நகைகள் என்பதால் அந்த ரசீதுகள் இல்லை. 1ம் எதிரி நகையை எடுத்துசென்றுவிட்டதாக சொல்வது வழக்கிற்காக சொல்கிறேன் என்றும் உண்மையில் எடுத்து இருந்தால் அதற்கான ரசீதுகளை போலீசாரிடம் கொடுத்து நீதிமன்றத்தில் ஒப்படைத்திருப்பார்கள் என்றால் சரியல்ல.

8. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் 2ம் எதிரி திண்டுக்கல் மாவட்டம், சாரணப்பட்டி யூனியன், புகையிலைப்பட்டி 2ம் எதிரி வீட்டின் முன்பு என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள எல்எண்டார் காவல்நிலையத்திலோ, மகளிர் காவல்நிலையத்திலோ புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போன்று சம்பவம் நடைபெற்ற இடமானது திண்டுக்கல் மாவட்டம், சாரணப்பட்டி, புகையிலைப்பட்டி அதிகாரஆள்வரை என்பதால் அங்கே புகார் கொடுத்து அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து சாட்சியம் அளிக்க முடியும் என்றும் அதனை விடுத்து மணப்பாறை காவல்நிலையத்தில் அதிகார ஆள்வரை எல்லையை மாற்றி புகார் கொடுத்து அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து அதற்கு ஆதாரவாக பொய் சாட்சியம் அளிப்பது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. அந்த மாதிரி எந்தவித சம்பவமும் நடக்காததால் மணப்பாறை காவல்நிலைய சரகம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்து அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. 1ம் எதிரி ஜாதகம் தொழில் செய்து வருகிறார் என்றால் ஆமாம். காலை 6.00 மணிக்கு சென்றுவிட்டு இரவு 11.00 மணிக்கு வருவார் என்றால் சரியல்ல. ஜாதகம் இருந்தால் பார்ப்பார் இல்லையென்றால் உடனடியாக வீட்டிற்கு வந்துவிடுவார். எனது மச்சான் எனது அக்காவையும், குழந்தைகளையும் பராமரித்தும், கண்ணுகருத்துமாக இருந்து அவர்களுக்கு தேவையானவற்றை பூர்த்தி செய்து வந்தார் என்றால் திருமணம் முடிந்து 6 வருடங்கள் வரை தான் பார்த்து வந்தார். 1ம் எதிரி 6 வருடம் எனது அக்காவை பராமரித்து வந்தார் என்று சொல்வது தவறு என்றும் திருமணமான முதலில் இருந்து எனது அக்காவையும், குழந்தையையும் நல்லமுறையில் பராமரித்து அவர்களுக்கு தேவையான பொருள்களை வாங்கி கொடுத்து அளவு கடந்த அன்பாலும், பாசத்தாலும் தற்போது வரை இருந்துவருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி வையம்பட்டி 1ம் எதிரியும், எனது அக்காவும் குடியிருக்கும் வீட்டில் அவர்களுக்குள் பிரச்சனை சம்மந்தமாக எனக்கு தகவல் சொன்னால் மட்டும் தான் எனக்கு தெரியும் என்றும் எதுவும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

10. நான் சொல்வது போன்று சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் எந்த விதமான சம்பவமும் நடைபெறவில்லை என்றும் ராணி என்பவர் வேறு ஒரு நபருடன் தொடர்பில் இருப்பதால் அதை மறைக்க தனக்கு சாதகமான சூழ்நிலையை பயன்படுத்தி நடக்காத சம்பவத்தை நடந்ததாக தங்களிடம் கூறி அதற்கு ஆதாரவாக ஒரு புகார் கொடுத்து அந்த புகாரின் அடிப்படையில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அ.சா.1 அவ்வாறு கிடையாது, நான் பொய்யாக சாட்சியம் அளிக்கவில்லை. இந்த வழக்கிற்கும், 1, 2 எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. தற்போதும் எனது அக்கா ராணியையும், குழந்தைகளையும் அழைத்து சென்று வாழ்வதற்கு தயாராக உள்ளார் என்றால் புற்றுநோய் வந்த குழந்தையை வைத்தியம் பார்க்காமல், சோறு தண்ணிக்கு வழியில்லாமல் எனது அக்கா மில்லில் வேலை செய்து குழந்தைகளை வளர்த்து வருகிறார். 5 வருடங்களாக 1ம் எதிரி குழந்தைகளுக்கோ, எனது அக்காவிற்கோ எதுவும் செய்யவில்லை, சேர்ந்து வாழ்வதற்கான நடவடிக்கை எதுவும் நடக்கவில்லை. மேற்படி எனது அக்காவிற்கும், குழந்தைகளுக்கும் பராமரிப்பு தொகையை செலுத்தி இன்றுவரை பார்த்து வருகிறார் அதையெல்லாம் மறைத்து அங்கு நடக்கவிருக்கும் விஷயம் எனக்கு நேரடியாக ஏதும் தெரியவில்லை என்று சாட்சியம் அளித்த பின்பு வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சண்டை நடந்த போது 1ம் எதிரியும், எனது அக்காவும் எனக்கு போன் மூலம் தகவல் சொல்லி நான் சென்று சமாதானம் பேசியுள்ளேன். மேற்படி விபரத்தை போலீசார் விசாரணையிலும், புகாரிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

11. எனது அக்கா திண்டுக்கல் மாவட்டத்தில் தான் புகார் கொடுத்திருக்க வேண்டும் என்றும் அதைவிடுத்து மணப்பாறை மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 26.11.2025 | |
| CC.No. 109/2023 | |
| சாட்சி : PW2 | |
| பெயர் : திரு. சுப்பிரமணி (எ) அய்யர் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. முருகேசன் | தொழில் : விவசாயம் |
| கிராமம் : வெள்ளிவாடி | சமயம் : |
| தாலுக்கா : மணப்பாறை | வயது : 55/2025 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர் ) | |

----------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 ராணியை தெரியும். ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும். அ.சா.1 க்கும், 1 வது எதிரிக்கும் திருமணம் நடைபெற்றது. சுமார் 10 வருடத்திற்கு முன்பு 1 வது எதிரி அ.சா.1 னின் அக்காவாகிய 2 ம் எதிரியுடன் தொடர்பில் இருப்பதாக அ.சா.1 னின் அக்கா என்னிடம் சொன்னார். அதன்பெயரில் நானும், சக்திவேல், தங்கராஜ் ஆகியோர்கள்சென்று 1 ம் எதிரியுடன் சொந்ததிற்குள் பிரச்சனை இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்று எச்சரிக்கை செய்துவிட்டு வந்தோம். அ.சா.1 ஐ 1 வது எதிரி துன்புறுத்தியதாக அவரது அப்பா என்னிடம் சொல்லி நாங்கள் கேட்டோம். பின்னர் அ.சா.1 கொடுத்த புகாரின் பெயரில் 2021 ம் ஆண்டு போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2. நான் இருக்கிறது வெள்ளிவாடி என்றால் ஆமாம். 1 ம் எதிரியும், ராணியும் வையம்பட்டியில் குடியிருந்தார்கள் என்றால் ஆமாம். அவர்களுக்குள் என்ன விஷயம், என்ன பிரச்சனை தொடர்பாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் வெள்ளிவாடியில் விசாரித்தார்கள், தேதி, மாதம், வருடம் எனக்கு ஞாபகமில்லை.

வருடம் 2021 ம் ஆண்டு. நான் முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் குடும்ப பிரச்சனையில் பஞ்சாயத்து பேசிவிட்டதை சொல்லியுள்ளேன். யார் யாரை திட்டினார்கள், என்ன விஷயத்திற்காக திட்டினார்கள், அவர்களுக்குள் என்ன பிரச்சனை நடந்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ராணி என்பவருக்கு நான் மாமன் முறை, ஒரே இனத்தை சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம். எத்தனை முறை பஞ்சாயத்து செய்தேன் என்றால் ஒரே முறை பஞ்சாயத்து செய்தேன். எங்கு வைத்து பஞ்சாயத்து செய்தோம் என்றால் ஆறுமுகம் வீடான வையம்பட்டியில் பஞ்சாயத்து பேசினோம்.

3. பஞ்சாயத்து பேசிய போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பின்னிட்டு சாட்சி யோசனை செய்து தங்கராஜ், சக்திவேல், செல்வராஜ், நானும் உடன் இருந்தோம் என்று சாட்சியம் அளிக்கிறார். ஒரு முறை பஞ்சாயத்து செய்தது தேதி, மாதம், வருடம் ஞாபகமிருக்கிறதா என்றால் இல்லை. நான் சொல்வது போன்று அவர்களுக்குள் எந்தவிதமான சண்டை, சச்சரவுகள் இல்லை என்றும் அ.சா.1 ஐ , 1, 2 எதிரிகள் எந்தவிதமான கெட்டவார்த்தைகள் சொல்லி திட்டவில்லை என்றும், வரதட்சணை வன்கொடுமை செய்யவில்லை, கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றும் நடக்காத சம்பவத்திற்காக நடந்ததாக சொல்லி நீதிமன்றத்தில் மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 ராணியோடு புகார் கொடுக்க செல்லவில்லை என்றால் சரிதான். நான் எந்தவிதமான பஞ்சாயத்து செய்யவில்லை என்றும் நான் ராணிக்கு தாய்மாமா என்பதால் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் வையம்பட்டியில் நடந்ததாக அ.சா.1 னின் அப்பா எனக்கு தகவல் சொல்லி தான் தெரியும், பஞ்சாயத்திற்கு சென்றோம். மேற்படி சம்பவம் வையம்பட்டியில் நடைபெறவில்லை என்றும் திண்டுக்கல் மாவட்டம், சாரணப்பட்டி, புகையிலைப்பட்டியில் வழக்கின் 2ம் எதிரி வீட்டின் முன்பு சம்பவம் நடந்தது என்றால் அது இரண்டாவது முறை சம்பவம் நடந்தது. முதல் சம்பவம் வையம்பட்டியில் நடந்தது. மேற்படி இரண்டு சம்பவத்தில் எந்த சம்பவத்திற்கு புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் வையம்பட்டியில் நடந்த பிரச்சனைக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். அ.சா.1 வேறு ஒரு நபருடன் தொடர்பில் இருப்பதாகவும் அதை மறைப்பதற்காக தனக்கான சூழ்நிலையை பயன்படுத்தி 1, 2 எதிரிகள் உறவில் இருப்பதாக திண்டுக்கல்லில் அதிகாரஆள்வரையில் உள்ள சம்பவத்திற்கு மணப்பாறை காவல்நிலையத்தில் புகார் அளித்து வழக்கு பதிவு செய்து அதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிப்பது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 1, 2 எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால்

சரியல்ல. அ.சா.1 க்கு நான் தாய்மாமன் என்ற முறையில் அ.சா.1 க்கு ஆதாரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் தாய்மாமன் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| | | | |
|---|---|---|---|
| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | | | |
| Date: 26.11.2025 | | | |
| CC.No. 109/2023 | | | |
| சாட்சி : PW3 | | | |
| பெயர் | : திரு. சக்திவேல் | ஜாதி | : |
| த/பெ/க/பெ. | : திரு. பொம்மகவுண்டர் | தொழில் | : விவசாயம் |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : மணப்பாறை | வயது | : 44/2025 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர் ) | | | |

-----------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 ராணியை தெரியும். ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும். 2ம் எதிரிக்கும், 1 வது எதிரிக்கும் தகாத உறவு இருப்பதால் அ.சா.1 குடும்பத்தில் பிரச்சனைகள் இருந்தது வந்தது. நாங்கள் சமரசம் செய்து வைத்தும், 1ம் எதிரி மீண்டும் பிரச்சனைகள் செய்து வந்தார். என் வீட்டிலிருந்து சுமார் 3 வீடுகள் தள்ளி ராணியும், ஆறுமுகம் குடும்பம் நடத்தி வந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2. போலீசார் எந்த தேதியில், எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் 2021 ல் வையம்பட்டியில் வைத்து விசாரித்தார்கள். என்னை விசாரித்த அதிகாரியின் பதவி நிலை என்னவென்றால் காவல் உதவி ஆய்வாளரா அல்லது போலீசாரா என்பது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் ஊரில் முக்கியஸ்தாரா என்றால் இல்லை. நீதிமன்றத்திற்கும், காவல்நிலையத்திற்கும் சென்று வர பரிட்சையம் உள்ளது என்றால் எனது சொந்த வழக்கு விஷயமாக நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். அ.சா.1 க்கும், 1ம் எதிரிக்கும் இடையே என்ன பிரச்சனை என்றால் பக்கத்து வீடு என்பதால் ஒரே சண்டை சச்சரவாக இருக்கும். அது குறித்து நான் ஏதும் சொன்னேனா என்றால் குடும்ப பிரச்சனை என்பதால் நான்

கண்டுகொள்ளவில்லை, வாய்மொழியாக சொன்னேன், ஊரைக்கூட்டி பஞ்சயாத்து செய்தேனா என்றால் இல்லை.

3. காவல்நிலையத்தில் அ.சா.1 உடன் புகார் கொடுக்க சென்றேனா என்றால் இல்லை. 1ம் எதிரி, அ.சா.1 ஐ என்னுடன் சேர்ந்து வாழவைக்கும்படி என்னிடம் கூறினார் என்றால் கூறவில்லை. மேற்படி சம்பவம் எங்கு நடந்தது, சம்பவம் குறித்த புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பின்னிட்டு சாட்சி புகார் கொடுத்திருப்பதாக என்னிடம் சொன்னார். அது எந்த வருடம், மாதம், தேதி தெரியுமா என்றால் 2021 ம் ஆண்டு. எனக்கு இந்த சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும் அ.சா.1 எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவருக்கு ஆதாரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், அ.சா.1 ம் வெவ்வேறான சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.